உ

கடவுள் துணை.

மதிருஸ்

# தூக்குபாட்டு.

இவை-சிறுமணவூர்

முனிசாமிமுதலியாரா லியற்றப்பட்டு,

ஆ-இரத்தினவேலுமுதலியாரது

வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898

சென்னை நாராயணமுதலிவீதி 52-வது நெம்பர் வீடு.

உ

கடவுள் துணை.

# மதிரூஸ் தாக்குபாட்டு.

இ-ம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

மதிமோசம்போரீர் பெண்ணாலேகுடிகெட்ட
விதிவசங்கேளீர்

அநுபல்லவி.

பதிவிரதைபோல்தினம் புருஷனையேமாத்தி
சதிசெய்துபிள்ளையை க்ஷணத்தில்கொன்றுபோட்ட (மதி)

சரணங்கள்.

கொண்டகணவனுக்கு ரெண்டகம்பண்ணத்திட்டு
குடிகேடிபுருஷனை கிழமென்றுமதிப்பிட்டு
மூன்தாரப்பிள்ளைமேல் மோகக்கவலைப்பட்டு
மோசமென்றறியாமல் ஆசையவன்மேல்வைத்து
கைபிடித்தாளாம் அவன் தாயாச்சுதேயென்று
கால்பிடித்தாளும் யென்னை

பெற்றதகப்பனுக்கு பின்தாரமாச்சுது
பிள்ளையென்றெண்ணாமல் விபரீதம்பண்ணத்தாயே
பத்துமாதஞ்சுமந்து பால்தாரவிட்டாலும்
பாதுகாப்பதற்கு மாதாவாய்வந்தாயே
மதியெங்கேபோச்சு-அடுக்காதிந்தபேச்சு
உலகத்துக்கேச்சே எனக்கு

தாயாகவந்துநீ தாரம்போல்மடக்குறாய்
தந்தையறிந்தாலென்ன நிந்தையாய்முடியுமோ
தெய்வந்தான்பொறுக்குமோ தேசத்துக்கடுக்குமோ
சிச்சியென்னென்றாலே காட்டாதேமுகமென்றான்
பயந்தாப்போல்நின்றாள் தெரியாதென்குற்றத்தை
பொருத்துக்கொள்ளென்றாள் சகல
சாஸ்திரந்தெரிந்தாப்போல் சட்டங்கள்பேசுறான்
சரிசரியிவனாலும் வரவரமசக்கலா
மென்றுமனதில்வைத்து மெத்தவுத்தமிபோலும்
மேலுக்குவுபசாரம் நாளுக்குநாளாக

மனதையுங்களைப்பாள்-யிரும்பும்வுருகும்படி
கினைவுகள்கொடுப்பாள் அவனை
கண்டால்துயிலைகொஞ்சம் களைத்துவிலக்குவாளாம்
காமக்குறியைகாட்டி ஏமாந்துநிற்பாளாம்
அண்டையிலிருந்தாலும் அறியாப்போலிடிப்பாளாம்
அடுத்துப்பின்துடர்ந்தாலும் கடுத்தாப்போலிருப்பாளாம்
சோர்ந்திடுவாளாம் தலையைவலிக்குதென்று
சார்ந்திடுவாளாம்யெதிரில்
கலையைகளைந்துபோட்டு கிணற்றுக்குவருவாளாம்
காணுமல்வந்தாற்போல் சடுக்கென்றுமறைவாளாம்
இலையிலேயவன்விட்ட யெச்சிலைத்தின்பாளாம்
யெண்ணம்வருகும்படி பண்ணதந்திரத்தாலே(மதி)

## கும்மி.

இத்தனைகோலம்வருகிறசண்டாளி யென்னென்ன வித்தைகள்கத்திருப்பாள், சத்துங்கணவன்சந்தேகப்படாமலே, சந்திரமதிபோல் நடந்துவாராள். க

புருஷன் தொழிலுக்கு போகுமட்டும்யிவள் பூமியைப்பார்த்து நிமிராளாம், சிறுவன்வருகையை கண்டுவிட்டாலப்போ, சோலைக்கிளிபோலே கொஞ்சுவாளாம். உ

பெண்ணாலே யெல்லாமுடியுமென்று ஐயா முன்னோர்கள் சொன்னபழமொழிபோல், யெண்ணந்திரும்பாதிருந்திட்டபிள்ளைக்கி யெப்படியோசுகந் தந்துவிட்டாள். ௩

யெப்படியோயிவள்யெண்ணந்திரும்பியே யின்பசுகங்களைக்காட்டிவிட்டு, கைப்பிடிநாயகன்போல யிருவரும் ஒப்பியிருந்தார்சிலகாலம். ச

அண்டையயலார் தெரிந்துவிட்டார் பின்னால் கொண்டகணவன்தன்னை சிறிக்கலுற்றார், கண்டுபிடித்தல்லோ கேழ்க்கவேணுமென்று முண்டைபோல் பேசாதிருந்துவிட்டான். ரு

படுத்துயிருவரும் தூங்கையிலேயிவன் பார்த்துபிடித்திடவேணுவென்று, கடுத்தமுகக்குறிகாட்டாமல்தினம், கண்டுகாணுமலிருந்துவிட்டான். சு

நித்தமொருநாளாய்போகுதையாயிவன் நேராய்பிடிக்கவும்கூடலையாம், யெத்தனம்செய்தேயிருக்கையிலே யிவர்க்கென்னவிதிவசம் நேர்ந்துதையா.. எ

கொஞ்சிக்குலாவியே கட்டிலிலேயிவர், கூடியிருக்கையில்கண்டுவிட்டான், பஞ்சபூதங்கள் அஞ்சாமல்கிழவன், பட்டாகத்திதயாறுசெய்தான். அ

பட்டாகத்தி தயாறுசெய்தாரிவனை வெட்டியேபோடத்து ணிந்துக்கொண்டான் கட்டுசோர்கட்டடி கொஞ்சதூரத்திற்கு, கால்வழிபோகவேணுமென்று சொன்னான். ௬

பத்துநாளைக்குள்ளேவந்திடுவேன்பெண்ணே, பத்திரம்பை யனைப்பார்த்துக்கொள்ளு, சித்தங்கலங்காதே நானில்லையென்றி தோ சிக்கிரம்வாறேனென்றே நடந்தான். ௰

நொண்டிச்சிந்து.

கட்டுசாதங்கையில்பிடித்தான் இதற்குமுன், கத்தியெடுத் தொறுபுரம்பத்திரமாய்வைத்தான்எட்டியிரண்டடிநடப்பான்உ டனேயெண்ணுதும் யெண்ணிமனம் குண்ணிடுவான் கைகாலும் பதைபதைப்பான் யிவர்கள் கழுத்தையறிவதெப்போ யென்றுநி னைப்பான் ஊர்வழிநடப்பவன்போல் சிக்கிரம் ஒங்கிநடப்பான் காலைவாங்கிநடப்பான் பொழுதெப்போமறையுதென்று ஐயபா ர்த்திருப்பான் முகம்வேர்த்திருப்பான் அந்திப்பொழுதானவுட னே துரிதமாய் வந்தவழியேதிரும்பி நெருங்கிக்கொண்டான் பேருஊருகாட்டாமல் வீட்டிலே பதிங்கிக்கொண்டானிருட்டில் ஒதுங்கிங்கொண்டான். (தந்தின)

விருத்தம்.

கிழவனையனுப்பிவிட்டேன் கேழ்ப்பவருருமில்லை
மகிழுடனென்னைச்சேரும் மன்மதாவாடாயென்றாள்
தழுவியேமுத்தமிட்டு தாராளமாகப்பேசி
விழவிழசிரித்துக்கொண்டு விளையாடியிருக்கின்றாளே

நொண்டிச்சிந்து.

கட்டியிருகப்பிடிப்பாள் அவனைகனிவாயால் முத்தமிட்டுக் கடித்திடுவாள், தட்டிதுடையைக்கடிப்பாள்திரும்பியுந்தலையை குறிகிமடிமேல்படுப்பாள் முகத்துடன்முகமணைப்பாள்மோகமு டன் முத்திக்கொடுத்தே யிருக்கிபிரண்டிடுவாள் ஜெகத்தினில் தேவர்முதலாய் மனிதரும்சிறுயிருந்திட்டாரோ சேளடாயென் பாள் பிரகஸ்பதிதேவன்மனைவி தாரையவள் பிள்ளைபோலசந்தி ரனைபுணரலியா இந்திரன்தெரியாதா கௌதமன்யிழையாயகலி கையை யிணங்கலையா பிரமனும்யோக்கியனோ பெற்றபெண்மு றையாம் ஊர்வசியைபிடிக்கலியா, துரோபதை பதிவிரதையோ கருணன்மேல், தொடுக்கலியா மனந்துடிக்கலியா சிதைபதிகட க்கலியா வண்டோதரிசேதியதுவும் சிலதறியாயா கண்ணனது நடவடிக்கை நீயே, காணுவிட்டாலுங்கதை கேழ்க்கலியா உலக மிப்படியிருக்க யிதற்குமுன் யுகங்களுமிப்படியே நடந்திருக்க

நமக்குமாத்திரமென்னயா நாலுவேதமும்சாஸ்திரமும் குறுக்கிடுமோபாவபுண்ணியமேது மனம்போனபடியே நடவாவிட்டால் சுகமேது

விருத்தம்.

உலகமதிலுத்தமிக ளென்னைப்போல
வொருவருமேயில்லையென்று பசப்பிக்கொண்டு
குலநலமும்முறவவறையும் யெண்ணிடாமல்
கொண்டவனைரெண்டோகஞ் செய்தகழுதை
பலகலையுந்தெரிந்தாப்போல் கதைகள்சொல்லி
யையனையும்காமுகநாய் செய்துவிட்டாய்
தலையுருளவெட்டுகிறேன் பொருடீயென்று
தன்மனதிலெண்ணிமெள்ள நெருங்கினனே.

கும்மி.

இவ்விதமாகவே கொஞ்சிக்குலாவி, யிருவரிருந்திடும்வேளையிலே வொவ்விமனது பொருக்காமல் கிழவன், ஓங்கியே கத்தியெடுத்துவந்தான். ௰க

நெஞ்சந்துடித்து பதைத்திடவேகண்கள், நெருப்புப்பொறியும்பரந்திடவே பஞ்சிலிட்டதீயைப்போல கிழவனும், பத்தியெறிந்தல்லோ ஓடிவந்தான். ௰உ

எனக்குமனைவியாய்வந்தவளே எந்தன்பிள்ளைக்குசுகத்தை தந்தவளே, உனக்கல்லவோகத்தி வீசுகிறேனென்று, ஓங்கியொருவெட்டாய் போட்டுவிட்டான். ௰௩

கத்தியெடுத்திவனவீசயிலே யந்தகண்டார்ரவோளி மறைந்துவிட்டாள், பெத்தசுதனும் பிள்ளையின்கழுத்து பளீலென்றுரெண்டாய் விழுந்துதையா. ௰௪

ரெண்டாய்சிரசுவிழுந்திடவு மிந்தமுண்டம்விழுந்து புரண்டிடவும் கண்டவிடமெல்லாம்ரொத்தப்பிரவாகம் கண்ணாலேகண்டு மயங்கிவிட்டான். ௰௫

பிள்ளைகழுத்துவிழுந்திடவேயந்த பிரம்மத்தி சுத்திமுழித்திடவே கள்ளவிபசாரி அம்மணமாகத்தான் கந்தையைசுத்திக்கொண்டோடிவந்தாள். ௰௬

கத்தியைக்கையில்பிடித்துக்கொண்டு இவன்பித்தனைப்போல்பினத்திக்கொண்டு சுத்துமுத்துமிந்தகழுதையெங்கேயென்று சுணங்கன்போலே யலையுகிறான். ௧௭

குடிக்கியெமனாய்வந்த முண்டையிவள் கூச்சலோ ஏழூருகேட்டிடுமாம் அடித்துப்புரண்டுதெருவில்வந்துஜெனம் ஆயிரமாயிரஞ்சேர்த்துவிட்டாள். ௧௮

அண்டையயலுள்ள ஆணும்பெண்ணும் புவிஆளும்கெவர்
மெண்டுசேவகரும் முண்டையிவளிட்டசத்தத்தாலேஜெனம் மூ
லபலம்போல்சேர்ந்துவிட்டார் ௧௯

வீதியடங்காதகூட்டங்கண்டு வுயிர்விட்டபிணம்போலே நி
ன்றுவிட்டான் ஓதிடவாயுந்திரக்கவில்லைகிழவன் ஒன்றுமில்லா
மல்மயங்கிவிட்டான். ௨௰

கட்டிக்கிழவனைகொண்டுவந்தாருடன் தட்டையுங்கூடவே
நெட்டிவந்தார் பிட்டாஜயிலிலே போட்டடைத்துநாளை கேசுக
ளாரம்பஞ்செய்தனராம். ௨௧

மாண்டபிணத்தையுந் தூக்கிவிட்டாரிவளை மாரிஜெயிலில
டைத்துவிட்டார், ஆண்டவன்போலவே ஜட்ஜியெதிரிலே அனி
யாயக்கேசை விளம்பலுற்றார். ௨௨

சீராப்க்கிழவனுரைத்துவிட்டானிவள் சித்ராங்கிபோலேம
றைத்துவிட்டாள், தாறுமாறெல்லாந்துறைகள்தெரிந்திவன் த
லையைவாங்கும்படி தீர்மானித்தார். ௨௩

வைகாசிமாதம் இருபத்தெட்டாந்தேதி வாரமோதிங்கட்கி
ழமையிலே ஜெபயவே ஆறுமணிக்குள்ளே வாங்கிடபார்லிமெண்
டாருடவுத்திரவாம். ௨௪

உத்திரவுவரபார்த்திருந்தாரிவனை பத்திரமாகவே கார்த்தி
ருந்தார் தொத்திவருகின்ற தந்தியின்மார்க்கமாய் தூரத்துசே
தியறிந்துகொண்டார். ௨௫

சேதியைக்கண்டதுந் திங்கட்கிழமையில் ஜூன்மாதமொன்
பதாந்தேதியினில், வாதிகளெல்லாஞ்சொல்லி வாய்மூடுமுன்வா
ங்கிவிட்டாரிவன்சிரசை. ௨௬

கிழவன்சிரசையும் வாங்கிவிட்டாரிந்த கழுதையுங்கூடவே
சிஷ்டைசெய்தார் யிழிவாந்தொழிலைபுரிந்தல்லவோ யிவர்க்கித்
தனைதுன்பமுநேர்ந்ததையா. ௨௭

தாயைப்புணர்ந்த கதையுரைத்துமொண்டு தாள்வலிதீராதி
ருக்குமுன்னே, ஒருபாவியுடக்கதை வந்ததையா அதைபாடி
முடிக்குறோன்நேசர்களே. ௨௮

பணத்திற்பெரியோ னொருசீமான் திருப்பாபுலியூரி லரண்
மனையாம், குணத்தையுரைக்கவோர்பிள்ளையில்லாமலே கோடா
னகோடி சிலவழித்தான். ௨௯

முன்செய்தகர்மத்தினாலேயவருக்கு முக்கண்ணன் பிள்ளை
யில்லாவிடுத்தும், தன்ஆசைக்கோர்பிள்ளை தத்துவாங்கியே தா
விவளர்த்துவருகையிலே. ௩௰

சேர்த்துவளர்த்துக் கவிதீர்த்துநல்ல சித்திரம்போலேசிராட்டி பார்த்திபன்போலே வளர்த்துவருகையில் பத்தினிக்கோர் பிள்ளைதோன்றினதாம். ௩௧

தத்தெடுத்தபிள்ளை சிறுய்வளர்ந்தபின் தனக்கொருபிள்ளை பிறந்ததினல், பெத்தமகன் தன்னை கொஞ்சிவளப்பதை பெரிய பிள்ளையறிந்தானும். ௩௨

தன்னைமறந்து யிருப்பதுவும்அவர், தங்கள்மகனை வளர்ப்பதுவும், யெண்ணிபலவாய் மனஞ்சலித்து ஒருயெத்தனம் செய்தானும் நேசர்களே. ௩௩

நொண்டிச்சிந்து.

பிள்ளையில்லாததினல்நம்மை பிரியமுடனிதுவரை வளர்த்துவந்தார், உள்ளபொருள் பூஸ்திதியும்-அப்பா-உனக்கே யிப்பேனென்றுசெப்பிவந்தார், தனக்கொருபிள்ளைபெறவேவேணும் - தரித்துக்கொண்டேநம்மை வெறுக்கலுற்ருர், யினியிந்த பிள்ளையைவைத்தால்நமக்கு-யெள்ளவுங்கிட்டாது யென்றுத்துணிந்து, வெட்டிவிடகத்தியெடுத்து-சகோதரனை-வேடிக்கைகள் காட்டி மெத்தைதமேலழைத்து, அன்பானவார்த்தை யுரைத்து மெத்தைமேல்அழைத்துப்போ யொருபுரந்தனியேவைத்து, அப்படியிப்படிபார்த்தான் அங்கே ஆருமில்லாவேளையென்று கத்தியெடுத்தான், சிரிப்புகள்காட்டிக்கொண்டே கத்தியினல்-சடக்கென்று ஒருவெட்டாய் வீசியெறிந்தான் கையிரண்டும் வெட்டித்துணித்தான் அந்த காப்புகொலுசுரெண்டும் உருவிக்கொண்டான் ஆருக்குமகப்படாமல் தனதுஅரண்மனை நடந்து சீக்கிரம்நடந்தான், பின்னெருநாழிகடந்து- பெற்ற-பிள்ளைதனை காணமென்று வீடுமுழுதும், அன்னையுந்தகப்பனிருவர் அடா-அப்பாமகனேயென்று அழைத்துக்கொண்டு, மெத்தைபடி யேறிப் பார்த்தார் - அங்கே-மழைபொழிந்ததுபோல் உதிரங்கண்டார் கைவேறுகால்வேறு-தலைவேறு-கரும்புபோல் உடல்வேறுபுரளக்கண்டார், அவர்படுந்துயரமதை - ஆதிசேஷனும்சொல்லி யழித்தரமல்லலாம். (தந்தின)

கும்மி.

பிள்ளையிருந்த அதிசயத்தைதகண்டுபெரியமகனை தேடுகையில், கள்ளமில்லாமலே காணேமென்றவர், கலங்கியழுது தேடலுற்ருர் ௩௪

தாயுந்தகப்பனுந் தேடிக்கொண்டேயிவனை தாரணியெங்குமேஅலையலுற்ருர் கூவியேபக்தர்கள் தேடுஞ்ருவழியிலே மனங்குமிங்கி அழுகையிலே. ௩௫

[library stamp]

பிரின்சிகவர்னர் ஆளுமந்த டவுன்புதுச்சேரிபட்டணந்தன்னில் ஒரு ஒதியஞ்சாலையென்னுந்தெருவில் அவனை ஒடியேகண்டு பிடிக்கலுற்றார். ௩௬

திரோகமுழுவதும் ரத்தக்குறிகளும் திருடிக்கொண்டோடியசொத்துகளும் ஆறுமேசாட்சிகள் வேண்டாமல் அவனுக்கது வேதிஷ்டாந்தரமாச்சுதையா. ௩௭

சட்டியேஜட்ஜி யெதிரில்விட்டாரிவன் கையிலுள்ள சொத்தும் முன்னேவைத்தார்-பட்டக்கதையெல்லாம் கேட்டுவிட்டியிந்த பாவியைத்தூக்கிலே யேத்துமென்றார். ௩௮

சொல்லிவாய்ஜட்ஜியும் மூடுமுன்னேவுடன் சூழ்ந்துகொண்டாரெமதூதரைப்போல் கொல்லத்துணிந்துகொலைசெய்த பாவியைகூசாமல் தூக்கிலே மாட்டிவிட்டார். ௩௯

பிள்ளையைத்தாயார் புணர்ந்தகதையதின் பின்னாலே தம்பியைக்கொன்றகதை விள்ளப்போனாலின்னம் வேணதுண்டு விடமில்லாமல்விட்டேன் ஜெகத்தோரே ௪0

பாவிகளின்கதை தீர்ந்துதையா அதை பாடியே வாய்கூட நொந்துதையா கூவிசிலபுத்தி சொல்லுகிறேனதைகொண்டணைக்கவேணுநேசர்களே. ௪௧

துரோகத்தொழிலை நடத்தவேண்டாமிந்த துன்பத்துக்கு யிடம்வைக்கவேண்டாம் திரோகமே நீரின்குமிழாகும் வீண்தோஷந்தேடாதீர்கள் நேசர்களே. ௪௨

காமம்யெவருக்கும் யேமனையா சுனாகண்டவராருமே யில்லையையா, பூமியில்வல்லவனென்று பேர்கொள்ளும் புத்தியைத் தேடுங்கள்நேசர்களே. ௪௩

மாதுமேல்மையலைக் கொண்டல்லவா லங்கைமன்னனழிந்ததுங்கேழ்க்கலையா, தோதகபுத்தியைநீக்கிவிட்டுநல்லசுகத்தை தேடுங்கள்நேசர்களே. ௪௪

பெண்ணாலே இந்திரன் புண்ணானன் பாலசந்திரன்தேகமும்பின்னமானன் எண்ணக்கணக்குண்டோ பெண்ணாலே கெட்டவரொத்தனைகோடியோ நேசர்களே. ௪௫

அருமையறியா முரட்டுகாலம்மிது கர்மியைப்போற்றுந்திருட்டுகாலம், சிறுமணவூர்முனிசாமி சொல்வாக்கியம் சோதித்துபார்க்ககலிகாலகுணம். ௪௬

தூக்குபாட்டு-முற்றிற்று.

---